டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 8.02.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 190 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் உரங்கள் கையிருப்பு போதிய அளவில் உள்ளது

## மத்திய அமைச்சர் ஜெ பி நட்டா தகவல்

புது தில்லி, பிப்.7

தமிழ்நாட்டில் யூரியா, டிஏபி போன்ற முக்கிய உரங்களின் கையிருப்பு போதிய அளவில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது. 2025ஆம் ஆண்டு காரீப் பருவத்திலும் தற்போதைய ராபி பருவத்திலும் விவசாயத்திற்குத் தேவையான உரங்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதை மத்திய அரசு உறுதி செய்துள்ளது. தற்போதைய ராபி பருவத்தில், பிப்ரவரி 2ஆம் தேதி நிலவரப்படி தமிழகத்தில் உரங்களின் கையிருப்பு அதன் விற்பனை விகிதத்தைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது. குறிப்பாக யூரியா உரத்தின் தேவை 4.97 லட்சம் மெட்ரிக் டன் என்ற தேவைக்கு எதிராக அதன் கையிருப்பு 6.06 லட்சம் மெட்ரிக் டன்னாக உள்ளது.

இந்த உரத்தின் விற்பனை 4.77 லட்சம் மெட்ரிக் டன்னாக உள்ளது. விவசாயிகளுக்கு தரமான உரங்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

உரங்கள் தரக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ், தரம் குறைந்த உரங்கள் தயாரித்து விற்பனை செய்பவர்கள் மீது கடும் அபராதங்கள் விதிக்கப்படுகின்றன. நாடு முழுவதும் 4,11,350 சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 15,024 எண்ணிக்கையிலான விளக்கம் கோரும் நோட்டீசுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இது தொடர்பாக 783 முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப் பட்டுள்ளன. குறிப்பாக தமிழ்நாட்டில் இந்தக் காலகட்டத்தில் மாநில அரசு அதிகாரிகள் 20,727 சோதனைகளை மேற்கொண்டு 50 நபர்களின் உரிமங்கள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

சேலம், ஈரோடு, தூத்துக்குடி, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் போலியான அல்லது கலப்படம் செய்யப்பட்ட உரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் முக்கிய உரங்கள் குறித்த நேரத்தில் விவசாயிகளுக்கு தடையின்றி கிடைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டது.

# பூச்சி கட்டுப்பாட்டில் முட்டை ஒட்டுண்ணி (டிரைக்கோகிரம்மா கைலோனிஸ்) – பயன்பாடு விவசாயிகளுக்கு செய்முறை விளக்கக் கூட்டம்



நாமக்கல், பிப்.7

நாமக்கல் மாவட்டம், காந்திபுரம் வட்டம், துத்திக்குளம் கிராமத்தில், பிஜேபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் சார்பில், பயிர்களை தாக்கும் தண்டு துளைப்பான், இலை சுரண்டி, பழ துளைப்பான் போன்ற தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் (டிரைக்கோகிரம்மா கைலோனிஸ்) பயன்பாடு குறித்து செய்முறை விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் என்பது ஒரு பயனுள்ள பராசிட்டாய்ட் பூச்சி ஆகும் என்றும், இது தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் முட்டைகளை அழித்து, பூச்சி தாக்கத்தை இயற்கை முறையில் குறைக்க உதவுகிறது என்றும் விளக்கப்பட்டது. மேலும், Trichogramma chilonis கார்டுகளை வயலில் எவ்வாறு தொங்கவிடுவது, எத்தனை நாட்களுக்கு ஒருமுறை பயன்படுத்த வேண்டும், ஒரு ஏக்கருக்கு எவ்வளவு அளவில் பயன்படுத்த வேண்டும் என்பன குறித்து நேரடி விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த உயிரியல் கட்டுப்பாட்டு முறையை பயன்படுத்துவதன் மூலம் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு குறைந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மனித ஆரோக்கியம் மற்றும் பயிர்களின் தரம் மேம்படும் என விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த செய்முறை விளக்கக் கூட்டத்தில் பல விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காடு வளர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



ராணிப்பேட்டை, பிப்.7

ராணிப்பேட்டை மாவட்டம், கோடைக்கால் கிராம அரசு தொடக்கப் பள்ளி மற்றும் கிராம ஊராட்சி தலைவரின் ஆதரவுடன், டான் போஸ்கோ வேளாண்மை கல்லூரி மாணவர்கள் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களை இணைத்து காடு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். மரங்களை வளர்ப்போம், பூமியை காப்போம், என்ற முழக்கங்களுடன் கிராம வீதிகளின் வழியாக பேரணி நடத்தப்பட்டு, பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் மரங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் சிறுவயதிலிருந்தே சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய பொறுப்புணர்வை மாணவர்களிடம் உருவாக்குவதாகும்.

காடு வளர்ப்பின் நன்மைகள், காற்றுத் தூய்மை, உயிரினப் பல்வகை பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை குறைப்பதில் மரங்களின் பங்கு குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும், மாணவர்கள் தாவர வளர்ச்சி, ஊட்டச்சத்து மற்றும் நிலைத்த வேளாண்மை நடைமுறைகளை நேரடியாகக் கற்றுக்கொள்ளும் வகையில் பள்ளியில் ஒரு சமையல் தோட்டமும் அமைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி மாணவர்களிலும் உள்ளூர் சமூகத்திலும் இயற்கையை பாதுகாக்கும் மனப்பான்மையை வளர்க்க உதவியது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கால்நடை மருத்துவ முகாமில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவிகள்




கடலூர், பிப்.7

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் வட்டம், வடஹரிராஜபுரம் கிராமத்தில், சிறப்பாக கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் கல்லூரியின் RAWE (Rural Agricultural Work Experience) திட்ட மாணவிகள் பங்கேற்றனர்.

முகாமில் கால்நடைகளுக்கான பொது சுகாதார பரிசோதனை, செயற்கை கருவூட்டல், குடற்புழு நீக்கம், நோய் கண்டறிதல் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. கிராமத்தைச் சேர்ந்த பல விவசாயிகள் தங்களின் மாடுகள், ஆடுகள் மற்றும் பிற கால்நடைகளை கொண்டு வந்து பயன்பெற்றனர்.

இந்த முகாமில் பங்கேற்ற RAWE மாணவிகள் கிராமப்புற கால்நடை பராமரிப்பு முறைகள், விவசாயிகளுடன் நேரடி தொடர்பு மற்றும் நடைமுறை அனுபவம் பெறும் வாய்ப்பை பெற்றனர். இத்தகைய முகாம்கள் கிராமப்புற மக்களுக்கு மிகுந்த பயன் அளிப்பதுடன், மாணவிகளுக்கு நேரடி அனுபவத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

# நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், பிப்.7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 10 மற்றும் 11.02.26 ஆகிய நாட்களில் நடைபெறும்.

சிறுதானிய வகைகளான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, தினை, பனிவரகு போன்றவை மக்களால் உணவில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புறங்களில் கேழ்வரகுமட்டும் பயன்பாட்டில் உள்ளது. சிறுதானிய வகைகளில் உள்ள சத்துக்களையும் அவற்றை உபயோகித்து தயாரிக்கப்படும் கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

அவையாவன

- பாரம்பரிய உணவுகள்
- பிழிதல்
- அடுமனைப் பொருட்கள்
- உடனடி தயார்நிலை உணவுகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/-, (ரூ.1500/- GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பயிற்சி நடைபெறும் இடம் : அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003.

பயிற்சியானது காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

பேருந்து நிறுத்தம் : வாயில் எண். 7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழியாக, கோயம்புத்தூர்-641003.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயபுத்தூர் – 641 003. அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய அறிவியல் தினம்

கோயம்புத்தூர், பிப்.7

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள தாவர மூலக்கூறு மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் (CPMB&B) மற்றும் உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையம் (COXBIT) இணைந்து தேசிய அறிவியல் தினத்தை கொண்டாடும் வகையில் 6.2.26 அன்று உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மைய வளாகத்தில் பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் போட்டிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வானது, பள்ளி மாணவர்களிடையே அறிவியல் விழிப்புணர்வை வளர்ப்பதையும், ஆர்வத்தை ஊக்கு விப்பதையும் நோக்கமாக அமைந்தது. இந்நிகழ்ச்சியில் கோயம் புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு அரசு மற்றும் தனியார் என மொத்தம் 16 பள்ளிகளைச் சேர்ந்த 390 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடன் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். இந்த அறிவியல் போட்டிகள் மூலம், மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், பகுப்பாய்வு சிந்தனையை வளர்க்கவும், அறிவியல் மற்றும் புதுமைகளின் மீது ஆழமான ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ளவும் ஒரு சிறந்த தளமாக அமைந்தது. சர் சி.வி.ராமனால், ராமன் விளைவு கண்டுபிடிக்கப்பட்டதை நினைவு கூரும் தேசிய அறிவியல் தினத்தின் முக்கியத் துவத்தையும் இளம் தலைமுறையினரிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதன் அவசியத்தையும் இது எடுத்துரைத்தது.

அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் பள்ளி மாணவர் களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதில் இத்தகைய நிகழ்ச்சிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்றும், இதன் மூலம் மாணவர்களுக்கு அறிவியல் கருத்துக்கள் மற்றும் ஆராய்ச்சிச் சூழல்கள் குறித்த நேரடி அனுபவம் கிடைக்கிறது என்றும் ஏற்பாட்டாளர்கள் வலியுறுத்தினர். நாள் முழுவதும் தொடர்ச்சியான திறனறிவு போட்டிகள் மற்றும் ஊடாடும் அமர் வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பேச்சுப் போட்டி, மாணவர்கள் அறிவியல் கருத்துக்களைத் தெளிவுடனும் நம்பிக்கையுடனும்

முன் வைக்கும் போது, தங்கள் பொதுப் பேச்சுத் திறனை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பை வழங்கியது. கட்டுரைப் போட்டி, சம கால அறிவியல் கருப்பொருள்கள் குறித்த தங்கள் எண்ணங் களை வெளிப்படுத்த பங்கேற்பாளர்களை ஊக்குவித்தது, இதன் மூலம் அவர்களின் சிந்தனை மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை மேம்படுத்தியது.

வினாடி-வினாப் போட்டி, பல்வேறு அறிவியல் துறைகளில் மாணவர்களின் அறிவைச் சோதித்து, ஆரோக்கியமான போட்டி மற்றும் கூட்டு கற்றல் உணர்வை வளர்த்தது. Canvas Painting மற்றும் மலர் அலங்காரம் போன்ற ஆக்கப்பூர்வமான நிகழ்வுகள், மாணவர்கள் கலை மூலம் அறிவியல் கருத்துக் களை வெளிப்படுத்த உதவியது. பங்கேற்பாளர்கள் அறிவியல் கருப்பொருள்களின் புதுமையான காட்சி விளக்கங்களை வழங்கினர். இது படைப்பாற்றல் மற்றும் அறிவியல் புரிதல் இரண்டையும் பிரதிபலித்தது. Myth VS Fact போட்டி, பொதுவான தவறான கருத்துக்களை விமர்சன ரீதியாக மதிப்பிடவும், அறிவியல் உண்மைகளை கட்டுக்கதைகளிலிருந்து வேறு படுத்தவும் மாணவர்களை ஊக்குவித்தது. மற்றொரு தனித்துவ மான செயலான 'Rank Only Memory' அறிவாற்றல் திறன் களைக் கூர்மைப்படுத்த வடிவமைக்கப்பட்ட போட்டிகள் மூலம் பங்கேற்பாளர்களின் கவனிப்பு மற்றும் நினைவாற்றல் திறன்களுக்கு சவால் விடுத்தது.

இந்நிகழ்ச்சயில் கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூறியதாவது, இது போன்ற முயற்சிகள் மாணவர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் தொழில் களைத் தொடர ஊக்கமளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும், இன்றைய சூழலில் அறிவியல் கருத்துக்களில் ஈடுபடு வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியமைக்கும் பாராட்டினர்.

இறுதியாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையத்தின் கட்ட மைப்புகளான, மூலக்கூறு உயிரியல் ஆய்வகம், குளிர்சாதன சேமிப்பு அறை, உயிரி தகவலியல் ஆய்வகம், தொழில் நுட்பத் தால் இயக்கப்படும் தொழில்முனைவோர் பிரிவு மற்றும் E-YUVA மையம் உள்ளிட்ட மேம்பட்ட வசதிகளின் செயல்விளக்கம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 27 & 28.2.26 ஆகிய தேதிகளில் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 'பயோகான்கரென்சா'26' மற்றும் தேசிய அறிவியல் தினம்' 26 நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

இதில் இன்றைய போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்படும். மேலும் கல்லூரி மாணவர்களுக்கான இரண்டு நாள் கண்காட்சி, மாநாடு மற்றும் கூடுதல் போட்டிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தாவர மூலக்கூறு மற்றும் உயிரித் தொழில்நுட்ப மைய இயக்குநர் முனைவர் ந.செந்தில் கூறினார். மேலும், மூன்றாமாண்டு உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் உயிரி தகவலியல் மாணவர்களால் நடத்தப்பெறும் இந்நிகழ்வுகள் உயர் கல்வி மாணவர்களிடையே அறிவியல் கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி விழிப்புணர்வு மற்றும் துறைகளுக்கு இடையேயான கற்றலை மேலும் மேம்படுத்து வதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்றும் கூறினார்.

## பூச்சிக்கொல்லியின் நச்சுத்தன்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், பிப்.7

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் விவசாயி களுக்கு பூச்சிக்கொல்லியின் நச்சுத் தன்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பூச்சிக்கொல்லி மருந்து களின் நச்சுத் தன்மையை விவசாயிகள் எளிதாக அறிந்து கொள்ள நிற அடையாள முறை பயன்படுத்தப்படுகிறது. இதில் சிவப்பு நிறம் மிக மிக ஆபத்தானன நச்சுத்தன்மையைக் குறிக் கிறது. இதைப் பயன்படுத்தும்போது கடும் பாதுகாப்பு அவசியம். மஞ்சள் நிறம் அதிக ஆபத்தான நச்சுத்தன்மையைக் காட்டு கிறது. தவறான பயன்பாடு உடல்நல பாதிப்பை ஏற்படுத்தும். நீல நிறம் மிதமான நச்சுத்தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது.



பாதுகாப்பு முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும். பச்சை நிறம் குறைந்த நச்சுத்தன்மையைக் குறிக்கிறது, இது மனிதர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதுகாப்பானது. எனவே, பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்கும் முன் நிற அடையாளத்தை கவனிப்பது விவசாயிகளின் ஆரோக்கியம் மற்றும் மண்ணின் வளத்தை பாதுகாக்க மிக முக்கியம்.இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# செடிகளுக்கும் மொழி (பாஷை) உண்டு. தெரியுமா?



வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்‘ என்றார். அந்த காலத்துல வாழ்ந்த மக்கள் செடி கொடிகளுக்கு கருணை அன்பு காட்டியும் முல்லைக் கொடி படருவதற்கு தன்னுடைய தேரை பாரி வழங்கியது போல அன்பு செலுத்தி வாழ்ந் திருக்கிறார்கள் என்றால் பிரமிப்பாக உள்ளது.

அதே போல செடிகள் தங்களுடைய தகவல்களை ஒரு வித பாஷை மூலமாக பரிமாற்றம் செய்தன என்பது மிகையல்ல.

அதைப்பற்றி பார்ப்போம்.

**தொட்டாற் சிணுங்கி (MIMOSA PUDICA)**

இந்த செடி வயல் வரப்புகள் தோட்டங்களில் காணப்படும். இதனை யார் தொட்டாலும் உடனே ஆபத்து வந்ததாக கருதி தன்னை சுருக்கிக் கொள்ளும். அதைப் போல இன்னொரு செடிக்கு தனக்கு வந்த ஆபத்தை மற்றொரு செடிக்கு முன் கூட்டிய தெரிவிப்பது என்பது புதிதாக உள்ளதல்லவா?

**பேசும் செடிகள்?**

ஏதோ ஹாரி பாட்டர் படம் (சினிமா) பார்த்திருப்பீர்கள். அதில் பேசும் செடிகளைக் காட்டியிருப்பார்கள். அதை ஒரு கற்பனை பாத்திரமாக நினைத்து பார்த்து ரசித்திருப்போம். ஆனால் அப்படி நினைப்பது தவறு. செடிகள் உண்மையிலேயே பேசி முடியும் என்று சொன்னால் வியப்பாக இருக்கிறதல்லவா?

ஆம் ஜப்பானிய விஞ்ஞானிகள் சமீபத்திய ஆய்வு தான் இது. செடிகள் ஒன்றோடு ஒன்று பேசிக் கொள்ளுமாம். அப்படி செடிகள் பேசுவதை பதிவு செய்திருக்கிறார்கள்.

**அது எப்படி தெரியுமா?**

ஒரு செடி மற்றொரு செடியை தொடர்பு கொள்ளுவதற்கு தன்னை சுற்றி பனி போன்று உருவாகியிருக்கும் காற்று வழியே தொடர்பு கொள்ளுமாம். தனக்கு வரும் ஆபத்தை அருகேயுள்ள செடிக்களுக்கு உணர்த்துமாம். இதை தெளிவாக விடியோ பதிவாக பதியப்பட்டுள்ளது. அங்கு நிறுவப்பட்டுள்ள 'பயோ சென்சார் ' மூலமாக கண்காணிக்கபட்டதாக மசா ட்சுகு டோயோட்டா என்ற விஞ்ஞானி தன்னுடைய நூலில் (NATURAL COMMICATION) கூறியுள்ளார்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணி நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

ராணிப்பேட்டை, பிப்.7

ராணிப்பேட்டை மாவட்டம், நாகவேடு கிராமத்தில், தொன் போஸ்கோ வேளாண்மை கல்லூரி மாணவிகள் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக, போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை நடத்தினர்.

இந்த நிகழ்ச்சி சோசியல் ப்ராஜெக்ட், எனும் அரசு சாரா அமைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விழிப்புணர்வு பேரணியில், ஃப்ரீமாண்ட் பள்ளி மாணாக்கர்களும் கலந்து கொண்டு, பொதுமக்களிடையே போதைப்பொருள் பயன் பாட்டால் ஏற்படும் உடல்நல மற்றும் சமூக தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். போதைப்பொருள் இல்லா சமூகமே வளமான சமூகம், என்ற முழக்கத்துடன் பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியின் மூலம் கிராம மக்களிடையே போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு உருவாக்கப்பட்டு, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் தவறான பழக்கங்களில் இருந்து விலக வேண்டும் என்ற செய்தி வலியுறுத்தப்பட்டது.

பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மாணவிகளின் சமூக சேவையை பாராட்டினர்.

# மல்லசமுத்திரத்தில் விவசாயிகள் வயலில் மைக்ரோ நியூட்ரியண்ட் கலவை குறித்து விளக்கக் காட்சி



நாமக்கல், பிப்.7

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் அருகிலுள்ள விவசாயிகள் வயலில் மைக்ரோ நியூட்ரியண்ட் (Micronutrient) கலவை பயன்பாடு குறித்து சிறப்பு விளக்கக் காட்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் உள்ளூர் விவசாயிகள் பெருமளவில் கலந்து கொண்டு நுண்ணூட்டச் சத்துகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் போது, பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் அதிக மகசூலுக்கும் தேவையான ஜிங்க், இரும்பு, போரான் போன்ற நுண்ணூட்டச் சத்துகள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும், மைக்ரோ நியூட்ரியண்ட் கலவை எவ்வாறு தயாரித்து வயலில் பயன்படுத்துவது, எந்த நிலை மற்றும் காலகட்டத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதையும் செயல்விளக்கமாக காட்டப்பட்டது. இந்த விளக்கக் காட்சியின் மூலம் மண் வளம் மேம்பட்டு, பயிர் வளர்ச்சி சீராக நடைபெற்று, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து மகசூல் உயர்வு கிடைக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியின் முடிவில் விவசாயிகள் சந்தேகங்களுக்கு பதிலளிக்கப்பட்டு, நிலத்திற்கேற்ற உர மேலாண்மை முறைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த முயற்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், நவீன விவசாய முறைகளை பின்பற்றும் ஆர்வத்தையும் அதிகரித்தது.

# கோவைக்காய் பயிரில் பழ வண்டு கட்டுப்பாட்டிற்கு இனக்கவர்ச்சி பொறி – பயனுள்ள செயல்விளக்கம்

தேனி, பிப்.7

தேனி மாவட்டம், கம்பம் வட்டாரம், ஹனுமந்தன்பட்டி கிராமத்தில் கோவைக்காய் பயிரில் பழ வண்டு தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இனக்கவர்ச்சி பொறி பயன்பாடு குறித்து, மதுரை வேளாண்மை கல்லூரி மாணவி ரா.மகாலட்சுமி உள்ளிட்ட மாணவிகள் களத்தில் நேரடி செய்முறை விளக்கம் நடத்தினர்.





**செயல் விளக்கம்**

**பழவண்டு (Fruit fly) தாத்தின் அறிகுறிகள்**

கோவைக்காய் பழத்தின் மேற்பரப்பில் சிறிய துளைகள் காணப்படும். அந்தத் துளை வழியாக பழ வண்டு முட்டை இடுகிறது. முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் பழத்தின் உள்ளே வளர்ந்து, பழத்தை உள்ளே இருந்து அழுகச் செய்கின்றன.

**பாதிக்கப்பட்ட பழங்கள்**

வடிவம் மாறி, முன்கூட்டியே பழுத்து, தரையில் விழும். சந்தைக்கு அனுப்ப முடியாததால் விவசாயிகளுக்கு பெரும் வருமான இழப்பு ஏற்படுகிறது.

**இனக்கவர்ச்சி பொறியின் பயன்பாடு**

பழ வண்டுகளின் ஆண் பூச்சிகளை கவர்ந்து பிடிக்கும் ஒரு சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வலை. ஆண் பூச்சிகள் குறைவதால், இனப்பெருக்கம் தடைபட்டு பழ வண்டு தாக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. ரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாடு குறைகிறது. நல்ல தரமான கோவைக்காய் விளைச்சல் கிடைக்கிறது.

**பயன்பாட்டு முறை**

ஒரு ஏக்கருக்கு 8-10 இனக்கவர்ச்சி பொறி அமைக்க வேண்டும். பயிர் உயரத்தில் (சுமார் 1-1.5 மீ) தொங்கவிட வேண்டும். 30-45 நாட்களுக்கு ஒருமுறை லியூரை மாற்றுதல் அவசியம்.

தமிழ்நாடு கிராமப்புற விவசாயப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் இந்த செய்முறை விளக்கமானது இப்பகுதி விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

# முளைகட்டிய ராகி மால்ட் பவுடர் செய்முறை [Sprouted Ragi Malt Powder]

இந்த மால்ட் பவுடர் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற மிகச் சிறந்த ஒரு ஆரோக்கியமான பானம். காலை உணவுக்குப் பதிலாகவும், இடைவேளையில் நேரங்களில் நமது உடற்கூறு அமைப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது.

**தேவையான பொருட்கள்**

- ராகி (கேழ்வரகு) – 2 கப்
- பாதாம் – 10
- முந்திரி பருப்பு – 10
- பிஸ்தா – 5
- ஏலக்காய் – 4
- சுக்கு தூள் – 1/2 டீஸ்பூன்
- பனங்கற்கண்டு – 1/2 கப் (அல்லது தேவைப்பட்ட அளவு)

(விரும்பினால் வேர்க்கடலை, பயத்தம் பருப்பு, போன்றவை சிறிதளவு சேர்க்கலாம்)

**செய்முறை**

ராகியை நன்கு கழுவி 8 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்கவும். பிறகு தண்ணீரை வடித்து ஒரு சுத்தமான துணியில் கட்டி 12–18 மணி நேரம் வைக்கவும். சிறிய முளைகள் வரும்போது ராகி தயார். முளை வந்த ராகியை நிழலில் 1 நாள் நன்றாக உலர்க்கவும்.

பிறகு வாணலியில் வதக்கி ஊசி போல் crisp ஆக செய்யவும். தனித்தனியாக பாதாம், முந்திரி, பிஸ்தா, ஏலக்காய் ஆகிய வற்றையும் வதக்கவும். பனங்கற்கண்டையும் சிறிய துண்டு களாக உடைத்துக் கொள்ளவும்.

அனைத்து பொருட்களையும் மிக்ஸியில் போட்டு நன்கு மையாக பொடியாக அரைக்கவும். விரும்பினால் சலித்து மென்மையான பவுடராக எடுத்து கொள்ளலாம்.

ஏர் டைட் டப்பாவில் அல்லது கண்ணாடி பாட்டிலில் வைத்து 2 மாதம் வரை பாதுகாத்துக் கொள்ளலாம்.

**பயன்படுத்தும் முறை**

2 டீ ஸ்பூன் ராகி மால்ட் பவுடரை சிறிது தண்ணீர் அல்லது பாலை சேர்த்து குழைத்து கொள்ளவும். பிறகு ஒரு கப் தண்ணீர் அல்லது பால் சேர்த்து நடுத்தர தீயில் கிளறிக்கொண்டு வேகவைத்து கொண்டு வரவும். கொஞ்சம் தேன் அல்லது பனங்கற்கண்டு தூள் கலந்து பரிமாறலாம்.

**குறிப்புகள்**

பசும்பால் அல்லது தேனுடன் குடிக்க மிகவும் சுவையாக இருக்கும். குழந்தைகளுக்கு பனங்கற்கண்டு அல்லது தேன் சேர்த்து கொடுக்கலாம். அதிக வெயிலில் உடல் இளைப்பாற Ragi Malt சிறந்த இயற்கை குளிர்ச்சி தரும் பானம் இது.


தகவல் : **கோ.சுரேஷ்குமார், மைக்ரோ கிரீன் வளர்ப்பு செயல்பாட்டாளர், இயற்கை விவசாய ஆர்வலர், கோவில்பட்டி.**

# ஊரக பங்கேற்பு மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவிகள்


நாமக்கல், பிப்.7



பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை தொகுதி கார்கூடல்ப்பட்டி கிராமத்தில் ஊரக பங்கேற்பு மதிப்பீடு நுட்பங்கள் கிராம நிலவரை படம்,சமூக வரைபடம், மக்கள் தொகை கணக்கீடு, வெண் படம், தினசரி செயல்பாடுகள், நீர் வளங்கள் வரைபடம், பயிர் அட்டவணை, பருவகால அட்டவணை மற்றும் பிரச்சினை மரம் போன்றவற்றை வேளாண் விவசாயிகளுடன் சேர்ந்து மாணவிகள் வரைந்தனர். மேலும் மாணவிகள் இதை பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கினார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மக்காச்சோளத்தில் படைப்புழு [Fall army worm] கட்டுப்பாட்டிற்கு விரட்டி ஈர்க்கும் [Push pull] உத்தி மாணவிகள் செயல் விளக்கம்




நாமக்கல், பிப்.7

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரத்தில் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் மக்காச்சோளத்தில் படைப்புழு தாக்குதல் மற்றும் அதன் கட்டுப்பாடு முறைகள் குறித்தும் விவசாயிகள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். பயிர்களைக் கொண்டு படைப்புழுவை கட்டுப்படுத்துவது தான் இந்த விரட்டி ஈர்க்கும் உத்தி.

**முக்கியக் கூறுகள்**

✓ விரட்டுதல் - மக்காச்சோள வரிசைகளுக்கிடையே வேலி மசாலை (Desmanthus) ஊடுபயிராக வளர்க்க வேண்டும். இதில் உள்ள டெஸ்மோடியம் (desmodium) என்னும் எளிதில் ஆவியாகும் சேர்மம், படைப்புழு தாய் அந்துப் பூச்சிகளை முட்டையிட விடாமல் விரட்டுகிறது.

✓ ஈர்த்தல் - படை புழுக்களை மிகவும் கவரும் பயிரான நேப்பியர் புல்லை (தீவன பயிர்) ஓரப் பயிராக நட வேண்டும். இது படை புழுக்களை ஈர்த்து முக்கிய பயிரில் (மக்காச்சோளம்) முட்டையிடுவதை தடுக்கிறது.

இந்த முறை வயலில் நன்மை செய்யும் பூச்சிகளை (Natural enemies) ஈர்ப்பதன் மூலம், உயிரியல் கட்டுப்பாட்டையும் (Biological control ) அதிகரிக்க உதவுகிறது. இந்த செயல் விளக்கத்தில் நவணி கிராம மக்கள் ஆர்வமுடன் பங்கேற்று, இதன் பயன்கள் பற்றி அறிந்து கொண்டனர்.

# உளுந்து பயிரில் ட்ரைக்கோடெர்மா விரிடி மூலம் விதைச் சிகிச்சை குறித்த களச் செயல் விளக்கமளித்த வேளாண்மை கல்லூரி மாணவன்!



மதுரை, பிப்.7

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி அருகே உள்ள பள்ளப்பட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர் ச.கமலேஷ், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் கீழ் அங்குள்ள விவசாயிகளுக்கு உளுந்து பயிரில் ஏற்படும் விதை மற்றும் மண் வழி நோய்களை கட்டுப்படுத்தி, முளைப்பு மற்றும் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில் ட்ரைக்கோடெர்மா விரிடி (Trichoderma viride) மூலம் விதைச் சிகிச்சை செய்வது குறித்து ஒரு களச் செயல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில், பரிந்துரைக்கப்பட்ட அளவில் ட்ரைக்கோ டெர்மா விரிடியை உளுந்து விதைகளுடன் சமமாக கலந்து, விதைப்பு முன் சிகிச்சை செய்யும் முறையை விவசாயிகளுக்கு நேரடியாக எடுத்துக் காட்டப்பட்டது.

இந்த உயிரியல் கட்டுப்பாட்டு முறையின் மூலம் வேர் அழுகல், வாடல் போன்ற நோய்களை ஆரம்ப நிலையிலேயேத் தடுக்க முடியும் என்பதும், விதைகளின் முளைப்பு சீராக நடைபெறுவதுடன் செடிகளின் வளர்ச்சி வலுப்பெறுவதும் விளக்கப்பட்டது.

மேலும், ரசாயன மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் குறைந்த செலவிலான இந்த உயிரியல் விதைச் சிகிச்சை முறையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# பசுந்தாள் உரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, பிப்.7

திருச்சி மாவட்டம், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளங்கலை இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் (மதன் மோகன் ஜாதவ், மோகனபிரசாத்.சு, மோகித் குமார், நாககாமேஷ்.ஈ, பிருதிவி ராஜ்.இரா, பிரவின்குமார்.சே.அ, ரஞ்சன் குமார் மற்றும் ரிதேஷ் படேஜா) ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ், பழனி வட்டம், ஆலவலசு கிராமத்தில் உள்ள விவசாயி களுக்கு பசுந்தாள் உரங்களை பற்றி விளக்கம் அளித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பசுந்தாள் உரங்கள் மற்றும் அவற்றின் வேளாண் முக்கியத்துவம் குறித்து நேரடியாக விளக்கம் அளிக்கப்பட்டது. குறிப்பாக தக்கைபூண்டு, சணப்பு (Sunhemp), புங்கம், வேம்பு போன்ற பசுந்தாள் உரங்கள் மண்ணின் இயற்கை வளத்தை மேம்படுத்துவதிலும், மண்ணில் உள்ள உயிரணு செயல்பாடுகளை அதிகரிப்பதிலும் முக்கிய பங்கு வகிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

தக்கைபூண்டு மற்றும் சணப்பு போன்ற பசுந்தாள் உரப் பயிர்கள் காற்றிலுள்ள நைட்ரஜனை மண்ணில் சேர்த்து, வேதியியல் உரங்களின் தேவையை குறைப்பதாக விளக்கப் பட்டது. இதன் மூலம் மண்ணின் கட்டமைப்பு மேம்பட்டு, ஈரப்பதம் நீடித்து, பயிர்களின் வேர் வளர்ச்சி சிறப்பாக அமையும் என தெரிவிக்கப்பட்டது. புங்கம் மற்றும் வேம்பு இலைகளை மண்ணில் கலக்கும் போது மண்ணில் உள்ள தீங்கு விளை விக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்கம் குறைவதுடன், மண் ஆரோக்கியம் மேம்படும் என்றும் கூறப்பட்டது.

மேலும், பசுந்தாள் உரங்களை விதைப்பது, சரியான வளர்ச்சி நிலையிலேயே உழுது மண்ணில் கலப்பது, அதன் பின்னர் பிரதான பயிர்களை சாகுபடி செய்வது போன்ற நடைமுறை முறைகள் விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கப்பட்டன. பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நீண்ட காலத்தில் பயிர் விளைச்சல் அதிகரித்து, சாகுபடி செலவுகள் குறையும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

# அரப்பு மோர் கரைசல் பற்றிய செயல் முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், பிப்.7

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் 4ம் ஆண்டு பயிலும் மாணவர்கள், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் உள்ள பள்ளித்தெருப்பட்டி கிராமத்தில் அரளி விவசாயி மாரியம்மாவின் வயலில் அரப்பு மோர் கரைசல் பற்றிய செயல் முறை விளக்கத்தை எடுத்துரைத்தனர்.




விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு மற்றும் மண் வளத்தை மேம்படுத்த உதவுகிறது.

**செய்முறை**



450 மி.லி. மோர் எடுத்து, நான்கு நாட்கள் புளிக்க விட வேண்டும். அதன் பின்னர் 50 மி.லி. அரப்பு கரைசல் அல்லது அரப்பு தூள் சேர்க்க வேண்டும். இதனை அந்த 450 மி.லி. புளித்த மோருடன் நன்றாக கலந்து கொள்ள வேண்டும். மீண்டும் இரண்டு நாட்கள் திறந்த நிலையில் வைத்து புளிக்க விட வேண்டும். ஆறு நாட்களுக்குப் பிறகு கிடைக்கும் 500 மி.லி. அரப்பு மோர் கரைசலை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிர்களுக்கு தெளிக்க வேண்டும். இதில் விவசாயிகள் அரப்பு போர் கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு பற்றி கற்றுக் கொண்டனர்.

இந்த நிரூபணம் விவசாயிகளுக்கு அரப்பு மோர் கரைசலின் நன்மைகளை புரிந்து கொள்ள உதவியது.

**அரப்பு மோர் கரைசலின் நன்மைகள்**

● மலர் பயிர்களில் பூப்பிடிப்பை (Flower induction) தூண்டுகிறது.

● இந்த கலவையில் இயற்கையாகவே GA - (ஜிப்ரெல்லிக் அமிலம்) உள்ளது.

● இந்த கரைசலை 8 முதல் 12 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
Rithvik Pipe
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அரசு விவசாய கல்லூரி மாணவர்களுக்கான கிராமப்புற விவசாயப் பணி அனுபவத்திட்டம்



திருவண்ணாமலை, பிப்.7

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், சித்தாத்தூர் கிராமத்தில் 3.2.26 அன்று வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சி திட்டத்தின் கீழ் பிரச்சனைகளை கண்டறிதல் நிகழ்ச்சியை விவசாயிகளுடன் சிறப்பாக நடத்தினர்.

அப்போது சமூக மற்றும் வளங்கள் சார்ந்த வரைபடம், பிரச்சனை குறியீட்டு மரம், பருவ கால அட்டவணை, தினசரி வேலை விபர பதிவேடு, பை வரைபடம், பார் வரைபடம் மூலம் வேளாண்மையில் ஏற்படும் சிக்கல்கள், விவசாயிகளின் தேவைகள் போன்ற விபரங் களை அறிந்து கொள்ள முடிந்தது. மேலும் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு இந்நிகழ்ச்சியின் நோக்கத்தை எடுத்துரைத்தனர்.

கிராமத்தின் முன்னோடி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விவசாயத்தில் தாங்கள் சந்தித்த சவால்கள், தீர்வுகள் மற்றும் எதிர்கால தேவைகள் குறித்து இந்நிகழ்ச்சியின் மூலம் தெரிவித்தனர். இதில் 20 விவசாயிகள் கலந்து கொண்டு தங்களை அனுபவங்களை நேரடியாக பகிர்ந்து கொண்டனர்.

# வட்டார வளர்ச்சி அலுவலரை சந்தித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.7

நாமக்கல் மாவட்டம், எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் உள்ள பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள், தங்களின் கல்விப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக எலச்சிப்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் நீலாவை நேரில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பின் போது, வட்டார வளர்ச்சி அலுவலரின் முக்கிய பணிகள், பொறுப்புகள், ஊரக வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு திட்டங்கள், ஊராட்சி நிர்வாக அமைப்பு மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து அவர் மாணவர்களுக்கு விரிவாக விளக்கம் அளித்தார். குறிப்பாக, மக்களின் அடிப்படை தேவை களை நிறைவேற்றுவதில் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் பங்கு, திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முறைகள் மற்றும் கண் காணிப்பு செயல்முறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், ஊரக வளர்ச்சியில் இளைய தலைமுறையினரின் பங்களிப்பு அவசியம் என்பதையும், வேளாண்மை மற்றும் நிர்வாகம் இணைந்த வளர்ச்சியே கிராமப்புற முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடல் மாணவர்களுக்கு நிர்வாக செயல்முறைகள் குறித்த நேரடி அனுபவத்தையும், எதிர்கால தொழில் வாய்ப்புகள் குறித்த தெளிவையும் அளித்ததாக மாணவர்கள் தெரிவித்தனர்.

# கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு (PRA) மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

கரூர், பிப்.7



கரூர் மாவட்டம், வெண்ணமலை வட்டாரத்தில் பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள் தங்கள் இறுதியாண்டு பாடத் திட்டத்திற்காக கிராமப்புற அனுபவ பயிற்சி மேற் கொண்டு வருகின்றனர். இந்நிலையில் மண்மங்கலம் கிராமத்தில் கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு (PRA) மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் அவர்களின் வேளாண்மை சார்ந்த தேவைகள், வளங்கள் மற்றும் முக்கிய பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வு களை கண்டறியும் நோக்கில் இந்த செயல்முறை மேற்கொள்ளப்பட்டது. நிகழ்வின் போது கிராம மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, தங்களது அனுபவங்கள் மற்றும் கருத்துகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். நிகழ்வின் ஒரு பகுதியாக பிரச்சனை மரம், முழு கிராமத்தின் வள மற்றும் சமூக வரைபடம், வட்ட வரைபடங்கள்,

பருவ கால நாட்காட்டி, பயண வரைபடம், தினசரி கால அட்டவணை, மக்கள்தொகை விகிதம் மற்றும் செவ்வ வரைபடம் ஆகியவை கிராம மக்கள் முன் விளக்கப்பட்டன. இதன் மூலம் மண்மங்கலம் கிராம மக்கள் தங்களின் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் எதிர் காலத்தில் பயன்படுத்த வேண்டிய பல்வேறு தொழில் நுட்பங் ளை அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு பெற்றனர்.

# தக்காளி பழத்தினை தின்னும் புழு கட்டுப்பாடு செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்




நாமக்கல், பிப்.7

நாமக்கல் வட்டாரம், ராசம் பாளையம் கிராமத்தில், விவசாயி நல்லுசாமியின் தக்காளி வயலில், தக்காளி பயிரில் ஏற்படும் பழத்தைத் தின்னும் புழு தாக்கத்தை குறைப்பதற்கான நேரடி செயல்விளக்கம் நடத்தப் பட்டது. இந்த செயல்விளக்கத்தை நாமக்கல் பிஜிபி வேளாண் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் மேற்கொண்டனர்.

இரசாயன பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக, பூண்டு அடிப்படையிலான இயற்கை பூச்சி மேலாண்மை கரைசல் தயாரிப்பு மற்றும் தெளிப்பு முறைகள் விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன.

செயல்விளக்கத்தில், 250 கிராம் பூண்டை நன்றாக அரைத்து 1 லிட்டர் தண்ணீரில் கலந்து 8-10 மணி நேரம் ஊறவைத்து, அதை வடிகட்டி 9 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

முதல் பூப்பூக்கும் நிலையிலிருந்து 7-10 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கவும், அதிக புழு தாக்கம் காணப்பட்டால் 2-3 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கவும் கூறப்பட்டது. இந்த இயற்கை முறையால் தக்காளி பயிரில் புழு தாக்கம் குறைந்து, பழ சேதம் கட்டுப்படுத்தப் படுவதுடன், விவசாய செலவுகள் குறைவதாகவும், சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானதாகவும் விளக்கப்பட்டது.